# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1997 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க திருமணப் பதிவுச் (திருத்தச்) சட்டம்

---

(1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

(1997 ஜூலை மாதம் 17 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 5.10 தபாற் செலவு : ரூபா 2.50

# 1997 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க திருமணப் பதிவுச் (திருத்தச்) சட்டம்

[1997 ஜூலை மாதம் 15 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.-ஒ. 127/78 (ii)

## திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, திருமணப் பதிவுச் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்ட வாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "இருபத்தொரு வயதிற்குக் கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டு வயதிற்குக் கீழ்"என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *112 ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான 24 ஆம் பிரிவு, அதன் (6) ஆம் உட்பிரிவில் "பத்து ரூபா பெறுமதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தைந்து ரூபா பெறுமதி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது . *முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தால் மாற்றீடு செய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

2—D 043205—1,150 (97/10)

"இரண்டாம் அட்டவணை [பிரிவு 62]

| | எக்கடமைக்காக | யாருக்குக் கொடுபட வேண்டியது என்பது | யாரால் கொடுபட வேண்டியது என்பது | தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. | அவரது அலுவலகத்தில் ஒரு திருமண அறிவித்தலைப் பதிவதற்கு | பதிவாளர் | விண்ணப்பகாரர் | 10.00 |
| 2. | ஏதேனும் வேறு இடத்தில் திருமண அறிவித்தல் ஒன்றைப் பதிதல் | பதிவாளர் | விண்ணப்பகாரர் | 75.00 |
| 3. | அவரது அலுவலகம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் திருமண அறிவித்தல் ஒன்றைப் பதிதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் | விண்ணப்பகாரர் | 100.00 |
| 4. | அவரது அலுவலகம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் திருமண அறிவித்தல் ஒன்றைப் பதிதல் | மாவட்டப் பதிவாளர் | விண்ணப்பகாரர் | 125.00 |
| 5. | அவரது அலுவலகத்தில் திருமணத்தை நிறைவேற்றல் | பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர்கள் | 25.00 |
| 6. | அவரது அலுவலகத்தில் திருமணத்தை நிறைவேற்றல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 25.00 |
| 7. | அவரது அலுவலகத்தில் திருமணத்தை நிறைவேற்றல் | மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 25.00 |
| 8. | 38(1) ஆம் பிரிவின் கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நிறைவேற்றுதல் | பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 50.00 |

| எக்கடமைக்காக | | யாருக்குக் கொடுபட வேண்டியது என்பது | யாரால் கொடுபட வேண்டியது என்பது | தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 9. | 38(2) ஆம் பிரிவின் கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நிறைவேற்றல் | பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 250.00 |
| 10. | 38(2) ஆம் பிரிவின் கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நிறைவேற்றல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 275.00 |
| 11. | 38(2) ஆம் பிரிவின் கீழ் அவரது அலுவலகத்துக்கு வெளியே திருமணத்தை நிறைவேற்றல் | மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 300.00 |
| 12. | பதிவுசெய்யப்பட்ட பொது வணக்கத்தலமொன்றில் நிறைவேற்றப்பட்ட திருமணப் பதிவு | மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 20.00 |
| 13. | ஒரு திருமண அறிவித்தலின் மீது பதிவாளரின் சான்றை வழங்குதல் | பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 5.00 |
| 14. | திருமண அறிவித்தல் ஒன்றின் மீது பதிவாளரின் சான்றிதழை வழங்குதல் | மேலதிக மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 5.00 |
| 15. | அவரது அலுவலகத்தில் திருமண அறிவித்தல் ஒன்றின் மீது பதிவாளரின் சான்றிதழை வழங்குதல் | மாவட்டப் பதிவாளர் | திருமணத்திற்கான திறத்தவர் | 5.00 |

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.